## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கல்வியியல் (பி.எட்.) தேர்வு செய்யப்பெற்றோர் பட்டியல்

### செய்திக்குறிப்பு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2010-11 ஆம் நாட்காட்டி ஆண்டிற்காக வரவேற்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் தமிழக அரசின் இட ஒதுக்கீட்டு அடிப்படையிலும் நுழைவுத் தேர்வின்றி ஆசிரிய மாணவர்களின் மதிப்பெண்கள் அடிப்படையிலும் தர வரிசைப்படுத்தப்பட்டுத் தற்காலிகமாகத் தேர்வானவர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 500 ஆசிரிய மாணவர்கள் தேர்வு பெற்றோரில் பாடவாரியாகப் பின்வரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ் (152), ஆங்கிலம் (50), கணிதம் (100), அறிவியல் (98), சமூக அறிவியல் (100) (அறிவியலில் எஸ்.சி.ஏ (SCA), எஸ்.சி (SC) ஆகிய இனஒதுக்கீட்டுக்குரிய இடங்கள் காலியாக உள்ளதால் அவ்விரு இடங்களும் தமிழ்ப் பாடப்பிரிவிற்கு ஒதுக்கப்பட்டன.)

இதில் சிறப்பின இட ஒதுக்கீட்டில் இடம்பெறும் பொறிநிறைப் பிரிவினர் (உடல் ஊனமுற்றோர்) மற்றும் முன்னாள் இராணுவத்தினர் மகன்/மகள் 20 பேரும், பொதுப்பிரிவில் 135 பேரும், பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 133 பேரும், பிற்படுத்தப்பட்டோர் (முகமதியர்) பிரிவில் 17 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் பிரிவில் 100 பேரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் 75 பேரும், தாழ்த்தப்பட்ட வகுப்பு அருந்ததியரில் 15 பேரும், பழங்குடி இனத்தவரில் 5 பேரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பாடப்பிரிவிலும் தர வரிசைப்பட்டியலில் முதனிலை வகிப்போர் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| தமிழ் | ஏ.விசாலாட்சி, கோவை (02861) | 82.8888 |
| ஆங்கிலம் | ஜெ.விஜயபாரதி, நாகை (03314) | 65.0762 |
| கணிதம் | எஸ்.பூங்கொடி, மதுரை (02656) | 92.1 |
| அறிவியல் | எல்.முத்துலெட்சுமி, சென்னை (00065) | 91.7222 |
| சமூக அறிவியல் | சிவ.செந்தில்குமார், திருச்சி (04540) | 78.1864 |

...2

தரவரிசையில் இடம்பெற்ற வகுப்புவாரியாகக் குறைந்தபட்ச மதிப்பெண்கள் (Cut of marks) வருமாறு:

| பாடம் | பொதுப் போட்டி (OC) | பிற்பட்ட வகுப்பு (BC) | பிற்பட்ட வகுப்பு (முகமதியர்) (BCM) | மிகவும் பிற்பட்ட வகுப்பு (MBC) | தாழ்த்தப்பட்ட வகுப்பு (SC) | தாழ்த்தப்பட்ட வகுப்பு (SCA) | பழங்குடி வகுப்பு (ST) |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் | 75.1250 | 69.8666 | 64.6666 | 68.2666 | 67.5333 | 62.7272 | 64.3333 |
| ஆங்கிலம் | 56.9000 | 52.8000 | 56.5000 | 51.1000 | 53.4000 | 49.3000 | 50.2000 |
| கணிதம் | 76.5454 | 69.5909 | 67.1363 | 64.1800 | 57.8333 | 54.5000 | 54.4000 |
| அறிவியல் | 73.9444 | 67.3103 | 66.5217 | 64.5000 | 56.6000 | 44.8333 | எவரும் விண்ணப்பிக்க வில்லை |
| சமூக அறிவியல் | 68.7727 | 63.9500 | 60.5000 | 61.3076 | 60.9090 | 58.0000 | 53.0000 |

தேர்வு பெற்றுள்ளோர் விவரங்களைப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் (www.tamiluniversity.ac.in) அறிந்து கொள்ளலாம். மேலும் பல்கலைக்கழகத் தகவல் பலகையிலும் தேர்வுப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சேர்க்கை தொடர்பான கலந்தாய்வு இம்மாதம் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் நடைபெறும். இது பற்றிய விவரங்கள் தேர்வானவர்களுக்குத் தனித்தனியே அஞ்சல்வழி அறிவிக்கப்படும்.

1. தேர்வுப் பட்டியல் முற்றிலும் தற்காலிகமானதே. அரசின் இடஒதுக்கீடு, மாணவர்களின் மதிப்பெண் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உரிய கவனத்துடன் தேர்ச்சி பெற்றோர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், ஏதேனும் பிழை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் தொலைநிலைக்கல்வி இயக்ககம் அதனை சீராக்கிக் கொள்ள உரிமை உண்டு.

2. கலந்தாய்வுக்கு அழைக்கும்போது உரிய சான்றிதழ்களைக் கொண்டு வராவிட்டாலோ தேர்ச்சிக்கு அளித்திருந்த சான்றிதழ்களும் கலந்தாய்வில் பரிசீலிக்கப்படும் சான்றிதழ்களும் மாறுபாடானவையாகக் காணப்பட்டாலோ, அவர்களின் தேர்ச்சி உடனடியாக நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பங்கள் மிகுதியாக சேர்ந்திருப்பதால், மாணவர்கள் அனுப்பிய சான்றிதழ்களுடன் கூடிய ஒளிக்குறி அறி படிவங்கள் மற்றும் பிற சான்றிதழ்களைப் (OMR sheets and relevant documents) பாதுகாப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, மாணவர்கள் தேர்ச்சித் தொடர்பாக விசாரணைகள் ஏதும் தேவைப்படின் தேர்வுப் பட்டியல் வெளியான நாளிலிருந்து 30 நாளுக்குள் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தைத் தொடர்பு கொள்ளலாம். அதற்குப் பிறகு மேற்கொள்ளப்படும் தொடர்புகளுக்கு இயக்ககம் கண்டிப்பாக பதில் அளிக்க இயலாது.

**இயக்குநர் (பொ)**